**வேலூர் மாவட்ட முதன்மை கல்வி அவர்களின் (பொ) செயல்முறைகள்**

ந.க. எண்.3258/ஆ5/ 2025. நாள்.29/07/2025

.....

பொருள் : பள்ளிக்கல்வி – அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் 15 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவ / மாணவிகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடும் திட்டம் (Japanese Encephalitis immunization program) மாவட்ட சுகாதாரத்துறை மூலம் ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை நடைபெறுதல் – தொடர்பாக

பார்வை : வேலூர் மாவட்ட சுகாதார அலுவலர் அலுவலரின் கடித எண்.637/ஆ4/2025, நாள். 03.07.2025

.....

வேலூர் மாவட்டம், அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகளில் பயிலும் 15 வயதுக்குட்பட்ட அனைத்து மாணவ / மாணவிகளுக்கு ஜப்பானிய மூளைக்காய்ச்சல் தடுப்பூசி போடும் திட்டம் (Japanese Encephalitis immunization program) மாவட்ட சுகாதாரத்துறை மூலம் ஆகஸ்ட் 1ஆம் தேதி முதல் 31ஆம் தேதி வரை செயல்படுத்தப்படவுள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, தடுப்பூசியின் அவசியத்தை அனைத்து மாணவ / மாணவிகளுக்கு காலை வணக்கக் கூட்டம் மற்றும் சுற்றறிக்கை மூலம் வகுப்பாசிரியர் வாயிலாகத் தெரிவித்து மேலும் பெற்றோர்களுக்கும் தகவலைத் தெரிவிக்க அறிவுறுத்த வேண்டும்.

மாவட்ட சுகாதாரத்துறை அலுவலர்கள் தொடர்பு கொள்ளும் போது உரிய ஒத்துழைப்பினை நல்குமாறும் தேவையான ஏற்பாடுகளைச் செய்து தருமாறு தலைமையாசிரியர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

29.07.25

முதன்மை கல்வி அலுவலர்(பொ),
வேலூர்.

பெறுநர்:
தலைமை ஆசிரியர்கள்,
அனைத்து அரசு / அரசு நிதியுதவி பெறும் மற்றும் சுயநிதி பள்ளிகள்,
வேலூர் மாவட்டம்.

நகல்–

1. மாவட்ட சுகாதார அலுவலர்,
   மாவட்ட சுகாதார அலுவலகம்,
   வேலூர் மாவட்டம்.
2. மாவட்டக் கல்வி அலுவலர்,
   (இடைநிலை / தொடக்கக் கல்வி) வேலூர் மாவட்டம்.
   (தொடர் நடவடிக்கை மேற்கொள்ளும் பொருட்டு)
   (இவ்வலுவலக மின்னஞ்சல் மூலமாக)